முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.

Sc.No. 47/2023

நாள் 16.09.2025

( A2 to A4 ஆஜர். A1 இறந்துவிட்டார் )

அ.த.சா.9 திரு. அசோக்குமார், மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் செய்யப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் காவல் நிலையத்திலிருந்து வெளிப்பணிக்கு பணிக்கப்பட்டால் நான் பாக்கெட் டைரியில் குறித்து வைத்துக்கொள்வேன் என்றால் சரிதான். நான் ஓட்டும் வாகனத்திற்கு Log Book பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று காவல் நிலையத்தில் எத்தனை மணியிலிருந்து பணியில் இருந்தேன் என்றால் காலை 07.00 மணியிலிருந்து இருந்தேன். காந்தி சிலை அருகே சென்று வெங்கடேசனை பார்த்த போது, வெங்கடேசனை குற்றப்பிரிவு போலிசார் துரத்திவந்து, வெங்கடேசன் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டார் என கேள்விப்பட்டேன் என்றால் சரிதான்.

நான் எனது முதன்மை விசாரணையில் வெங்கடேசனை காந்திசிலை அருகே வைத்து பார்த்த போது நல்லநிலையில் இருந்தார் என்று சொன்ன விவரத்தை என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் மற்றும் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அரசுத்தரப்பு குறுக்கு விசாரணையில் சொன்ன, வெங்கடேசனை எமனேஸ்வரன் காவல் நிலையத்தில் இருந்து பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கைத்தாங்கலாக கோதண்டராமன், வேலு, ஞானசேகரன் ஆகியோர் அழைத்து செல்லும் போது உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்ற விவரத்தை பரமக்குடி நீதித்துறை நடுவர் மற்றும் இராமநாதபுரம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.16 17:44:46 +0530

நீதித்துறை நடுவர் எண். 2 விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்த போது, எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் சம்பவ சமயத்தில் பணியில் யார் யார் இருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார் மற்றும் குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் முனியசாமி ஆகியோர் எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் மேல்தளத்தில் போனார்கள் என பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சிறிது நேரத்தில் ஆய்வாளர் சுபாஷ் அவர்கள் அங்கு வந்தார் என்று பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

வெங்கடேசன் இறந்துபோனது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர் உடனடியாக காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 03.10.2012 ம் தேதிக்கு முதல்நாள் இரவு பரமக்குடி காக்காதோப்பு என்ற இடத்தில் இறந்துபோன வெங்கடேசனுக்கும் வேறு சில நபர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். காக்காதோப்பில் ஏற்பட்ட பிரச்சனையில் வெங்கடேசனுக்கு உடலில் காயம் ஏற்பட்டிருந்தது என்றால் எனக்குத் தெரியாது. காந்திசிலை அருகே சார்பு ஆய்வாளர் முனியசாமியை வெங்கடேசன் தாக்கியபோது, அந்த சமயத்தில் சார்பு ஆய்வாளர் முனியசாமி வெங்கடேசனை கம்பால் தாக்கியதால் வெங்கடேசனுக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தன என்றால் அது எனக்குத் தெரியாது. நான் எனது முதன்மை விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும், எனது உயர் அதிகாரிகள்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.16 17:44:49 +0530

அறிவுறுத்தலின் பேரில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.16 17:44:52 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .